உ

சிவமயம்.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
19 SEP 1911
814
MADRAS.

உண்ணாமுலை யம்மன் தவசு மாலை.

இஃது

மயிலை - அழகப்பமுதலியாரால்

சிவஞானபோத யந்த்ரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

சென்னை,

சிந்தாதிரிப்பேட்டை.

ஐயாமுதலியார் தெரு, ௩௬-வது வீடு.

விரோதக்ருது-௵ ஆவணி௴

இதன் விலை அணா-௪.

[காப்பிரைட் சுதந்தரம் பெறப்பட்டது.]

உ

முருகன் துணை

அம்மன் தவசு.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
REGISTERED
15 SEP 1911
MADRAS
824

சீரெங்கும் சிப்புரமும் தேசமற்ற பேரொளியும்
பாரெங்கும் மாய்கை யறுக்கும் பரஞ்சுடரே
பத்திக்கு முத்திதரும் பரமன் திருமகனே
பொய்யாத பிள்ளையாரே பொற்பாதம் நான் மறவேன்
அரகரனார் சங்கரனார் ஆதியம்பார் சோதியம்பார்
உரியவரே யென்றவர்க்கு ஓங்கும் விநாயகரே
வையம் தழைக்க மழைபொழியும் வானவர்க்கு
மெய்ப்புரிதி யம்மனுக்கு ஓங்கும் அருந்தவங்கள்
சரிகை கிரிகையால் ஞானதிக மொளிவாய்
செம்புரிவி சீலம் இளகி மனங்கசங்கி
பொங்குதவர்த்தோர்க்கும் பூரணத்தால் வாக்குரைக்கும்
செம்பவழக்கொண்ணே சிவனார் திருமகனே
கூறு மொழி நாவாலே தந்தருளும் குஞ்சரமே
அம்மன் நினைத்தா லொரு கர்மம் நின்முகனே தாள்போற்றி
ஏகாந்தமாக இருக்கும் சமயத்தில்
சந்திரரே சூரியரோ தாமிருவர் யாரென்றாள்
அம்மன் வுரைக்கவுமே அண்டம் நடுங்கவுமே
உமையாவுரைக்கவுமே உத்தசிவன் கேட்கவுமே
அண்ணொருநா ளிண்ணறியேன் அண்ணாந்த நாயகமே

பரவி பறந்தசெம்பல் பாடுசெம்பன் நீடுறுவி
எறவி மதியுடைய எந்தனுடன் கண்களென்றார்
நாதர் மொழி கேட்டவுடன் நாணி மனங்கலங்கி
வவ்வல் கொடிபறக்க மாமரத்தை பாருமென்றாள்
சேணியத்தை சோதிமொழி மூடினாள் தன்கரத்தால்
அங்கலுமுள்ள அடங்கலும் மூடினாள்
பின்னெளிவை மூட மிகரெண்டு மாய்கையும்
ஒன்று பதினாறுலோகம் உத்தருளும் பட்டமர்க்கு
ஆண்டமிரண்டுதோ மேலுலகம் யீணுச்சோ
சந்திரரே சூரியரே தன்கிராணம் தீண்டிச்சோ
என்னவகையால் இருள் வந்து இன்றமையும்
தவம் பண்ணும் மாமுனிவர் தங்கதவமிழந்தார்
மாலையனும் இந்திரனும் வானவருமாகக் கூடி
சிவனிருக்கும் வெள்ளிமலை சென்னருவோம்நாங்களென்றார்
நாராயணர் வனத்தில் நந்தீசர் போய் புகுந்து
சிரான மா பூஜை பண்ண திருமாலைக்கொண்டு நின்னே
பெருமாள் நெடுநேரம் சிந்தித்தார்
நின்னே பெருமாள் நெடுநேரம் மூச்சரிந்தார்
அவர் நகைச்சே மனமகிழ்ந்து செங்கோல் முடிதரித்து
ஈசர்க்கு ஏகாந்தம் ஏதெண்ணு றிப்பொழுது
சுந்தரி கண்மூடுவதும் சோதி நல்ல சூட்சமும்
மாதாவும் கண் மூடி வள்ளல் விளையாடுகிறாள்

கார்மேசர் வண்ணரும் காவணத்திலுட் புகுந்து
தழுவவொழியாத தர்ப்பணரே தாள்பணிந்து
உலகழிய திருவுளமும் ஆலாலமுண்டவர்க்கு
ஓசைவெளியும் உலகம் படுந்துயரம்
யீசர்க்கு யேகாந்தம் இந்த தணல்போல
ஆதி கையால் மூடுவதும் அண்டமிருளானதும்
சோதிமயமும் தோணும் பிரகாசமும்
எண்ணுமிந்த அண்டம் எரிக்கேரி கண்ணரிக
தண்டரிக மாலேக்கொண்டு புண்டரிகவாள் முகத்தாள்
புண்டரிகவாள்முகத்தாள் பொன் முருகர் கொண்டருளும்
அவருண்பார் அமிர்தம் உரைப்பார் பெரிமொழியில்
வம்பில்லா தக்கனுடன் வாய்மொழிகள் கூறிடுவார்
அம்புமுகமானவரே ஆட்டுமுக மாக்கிவைப்பார்
காலனே காலாலுதைப்பார் காமனே கண்ணுலெரிப்பார்
பாலகனே கொண்ணமிர்தம் உண்பார் பரிவுடனே
ஈடில்லா யீசர்க்கு இதுவே தொழிளிண்ணுர்
நாரதரும் சங்கரரும் ஓடி இடம்பார்த்தார்
ஆதிசிவனுர் அரனுர் அவர்கேட்டு
நேரெங்கும் செஞ்சடையார் நெற்றியில் கண் திறந்தார்
என்னப்பா என்னய்யா யீசா பரஞ்சோதி
சிவஞ் குலேஞ்ச சங்கரரே தவமழிந்தோம் சந்தையிலே
எக்கண்ணுங்காணுத இருள் கொண்டஞ் யீடழிஞ்சும்
முக்கண்ணு மீசா முறையோ முறையோமெண்ணுர்

அந்த மொழி கேட்ட புடன் அணுவதில்லை அம்பலவர்
நேரெங்கும் செஞ்சடையார் நெத்தியில் கண்மறைத்தார்
அற்புதமாயம்மை அகிலாண்ட நாயகமே
ஒப்பற்ற வுண்ணு மலையே உமையவளே
செப்பறிய சோதி சிவகாம சுந்தரியே
தப்புதவத்தை நிலையிட்ட தாரணியே
காரணமா காரணியே கச்சிபதியுமையே
மூன்று கடல் நீர் முகங்கழுவு மிப்பொழுது
கொண்டுகரை ஆறு வெள்ளம் ஆறு கரை சேர்ந்தாலும்
ஒம்மி லுரையாள் உரையாலும் அன்னமே
நான் தேடி நான் காணேன் நாதர் பெருஞ்சுடரே
வெளிக்கு வெளிபூத்த விரிஞ்ச பரிமளமே
கங்கிடங்கி கனிமதியுந்தோணுமல்
பொங்கி வழிஞ்சி உலகம் பொறுப்பழிஞ்சி
மங்கு திலகம்மா மாளுதம்மா பாருமெண்ணுர்
அங்கதஞற் கூற அறிவே பயந்நிமையும்
தன்கறத்தை வாங்கி தன்செவியில் மூடினுள்
வங்காரரும் சங்காரும் ஊருவெளியானுர்கள்
பொங்காரக வேங்கமுனி பொறுத்தாளும் தப்பி தந்தான்
அஞ்சலே பண்ணி சிவனே அடி வணங்கி
என் முன்னுக்கு முன்னே மூலமே மூவருளே
என் கண்ணுக்கொளிவே கருத்துக்கு மாறுயிரே
செந்தாள் புரியவரே செய்தேன் அறியாத

இழக்க சிவன் பாதம் என்றுமதி நினைந்தேன்
ஆதிசிவனார் அரனார் அவர் கேட்டு
செம்பவழவாயை திறந்து சிவனாரும்
செம்பவழவாயால் திருமுருகர் கொண்டருளும்
அடி களாணுக் கிணங்காத காசி எனுங் காஞ்சியாம்
அம்போர்கள் வந்து ஆளபதமளிப்பார்
கங்காவளையும் கரிஞ்சிப்பூ பூமலரும்
அம்மாவின் கீழ்மா அமர்ந்திருக்கும் அம்பு வீதம்
நீ வந்து மங்கே பூசை செய்யும் இன்னார் மகாதேவர்
சிவமொழியை கேட்டவுடன் சிந்தைமிகக் கலங்கி
தவமழிய வாரதஞ்சம் இல்லை யென்ருள் சங்கரியும்
மாரினில் பூணும் மருக்கழகும் தோளழகும்
பூசிய வெண்ணீறும் பூண்ட புலி நூலடையும்
ஏசாரோனம்மை இசம்பாரோ ரெண்டிசையும்
மாசாற்ற ஆகாசம் போலமனங்கலங்கி
தேசத்து சிந்தை இடைபுரிவதெக்காலம்
கூசாமலீசருடன் கூடி யிருப்பதெக்காலம்
என் தலையி லீசர் இரைனரைய பொற்பாதம்
வருந்தி நடக்கலுற்ருர் மாதளம்பூ மேனியம்மன்
அவள் பாதங்கள் ரெண்டும் இரு நிலத்தில் பாகாமல்
வாளோடே நொச்சி வளரும் மருக்கொழுந்து
கூடியே சோவே குணமுள்ள கோவலர்தம்
அந்தரத்திக் கன்னியர்கள் ஓட அமரர் சூழ
வந்து வந்து போற்றி வணங்கி இருதோளால்

அம்மன் வாழ்மலையைப் போற்றிவகை கொலைந்து நிண்ணார்கள்
அம்மை சீர்மலையைப்போற்றி திகைகொலைந்து நிண்ணார்கள்
ஆவடையார் திருத்தே டேழுந்தருளி திருக்கஞ்சருளியவர்
எல்லையளந்த பெருமாளவர் பார்த்து
ஏழுலக மாண்ட பெருமாளெடுத்துரைப்பார்
நாற்பத்தெண்ணாயிரத்து நல்ல இருஷிகளை
போமென்று சொல்லி பெருமாள்போக விடையளித்தார்
போமென்ற தேவரெல்லாம் அம்மன் முன்னே போற்றி
என்றே போய் பணிந்தார்
போற்றி என்ற தேவருக்கு அம்மன் போக விடையளித்தாள்
தனியே நடத்தாளே என் தங்க சிவகாமியம்மன்
எல்லையளந்த பெருமா ளவர் பார்த்து
ஏழுலகம் ஆண்ட பெருமாளெடுத்துரைப்பார்
அம்மா விதியோ விதிவசமோ வேதத்தால் தங்கள் மதி
நீ தனியே நடப்பானேன் என் தங்க சிவ காமியம்மன்
மான் விருதுங் கண்ணாரும் வழியே நின்று முத்துதித்தார்
ஓங்கு புகழ்தென்னருன உண்ணாமலைத்தாயும்
சிவகாமசுந்தரியும் திருவாய் மலர்ந்தருளி
என்னைப்போல் பெண் பிறந்தா ரெல்லார்க்கும் அருக்கை
கொடுத்து அலமோதி தானடந்தாள்.
தனியே நடந்தாளே தங்க சிவகாமியம்மன்
மற்று மொருவனத்தில் வந்தாளே மாதேவி
த்து வர்ணக்கிளிகள் முன்னே கீதம்பாட

கீதங்கள் பாடி கிளி மொழிக்கு வார்த்தை சொல்லும்
அதைப் பாராவுமையாள் பராமுகமாய் தானடந்தாள்
மற்று மொருவனத்தில் வந்தாளே மாதேவி
சக்கட்டம் பண்ணும்ந்த ஜாதிலிங்க நல் கிளிகள்
கீதங்கள் பாடி கிளி மொழிக்கு வார்த்தை சொல்லும்
அதைப்பாராவுமையாள் பராமுகமாய் தானடந்தாள்
மற்று மொருவனத்தில் வந்தாளே மாதேவி
பூதங்கள் வந்து பணிந்தே புறங்கார்க்கும்
நாகங்கள் வந்து பணிந்தே புறங்கார்க்கும்
அதைப்பாராமவுமையாள் பராமுகமாய் தானடந்தாள்
மற்று மொருவனத்தில் வந்தாளே மாதேவி
சந்தணம் பூத்துதிரும் தாரக் கொழுந்தோடும்
குங்கும் பூத்துதிரும் கோரக்கொழுந்தோடும்
மல்லிகைப் பூத்து மணங்கொடுக்கும் ரெண்டிசையும்
அதைப் பராவுமையாள் பராமுகமாய் தானடந்தாள்
மற்று மொரு வனத்தில் வந்தாளே மாதேவி
காட்டினில் வாழுமந்த கானகத்து மாமுனிவர்
மின்னலொளிவாய் விளக்கொளிவாய் தோணுது
அல்லியில்லா முல்லை முடிச்சுகட்டித் தோணுது
எட்டாமலரெடுத்து இன்பத்தில் வானவர்கள்
சாஷ்டாங்கமாக பணிந்தார் அம்மன் பாதத்தில்
தேங்கி திரைவளைத்தார் தில்லைகண்ண நாயகைக்கு
தடங்கண்ணுடையாளே தாள்பாதம் போற்றி யென்ணார்

பாலப்பழமும் பழுத்தப் பிலாச் சொலையும்
வேரில் பழுத்த வெடித்த பலாப்பழமும்
காட்டில் சிறு தேனும் காராம் பசும்பாலும்
ஒண்ணாகக் கூட்டி ஒடணாக மத்திச்சி
தேக்கிலையில் கொண்டுவந்து அம்மன் முன்பாக வைத்து முனி
வரெல்லாம் போற்றி யெண்ணார்
ஓங்குபுகழ் தென்னருண உண்ணாமலைத்தாயும்
சிவகாம சுந்தரியும் திருவாய் மலர்ந்தருளி
அண்டத்து மாமுனியும் அண்ட முது செய்தீர்கள்
பெரிய ரிஷிகளா மெத்த பிரயாசை பட்டீர்கள்
பனிரண்டு தான் வருஷம் பாரவிரதமுண்டு
நான் கொள்ளேனே யென்று கொத்தவரோ கையமர்த்தி
மாதளத்து மாமுனிவர் வாடி மனந்தளர்ந்து
அம்மன் வருவாளே யாமாகில் பாவம் தீருமே எண்ணிருந்
தோம்
அம்மன் வருவாளே யாமாகில் பாவம் மெத்தவும் மாச்சுதே
ஓங்குபுகழ் தென்னருண வுண்ணாமலைத்தாயும்
சிவகாம சுந்தரியும் திருவாய் மலர்ந்தருளி
மாரிமழை பொச்சாலும் வானுலகம்பொய்ச்சாலும்
தாளோடே மாமுனிவர் தங்க முடி தப்பாது
அக்ஷதையும் வெண்ணீறும் அள்ளியவள் கைகொடுத்தாள்
புஸ்தகத்தை கட்ட விழ்த்து போதநல்ல யாராய்ந்து
தப்பாது தாயே தவசு நிலையேறும்
தப்பாது தாயே தவ சித்தியாகிவிடும்
சேணியத்த செம்பொன் செணிந்த மலர் தேரேறி

ஒண்ணு வுரிவி ஒழு ஓழுகும் மாப்போலே
அங்கப் பிராணியர்கள் முத்து முடி கன்னியர்கள்
சித்தாந்த முத்துகளும் தரமைகளும் தாழ்டைகளும்
சேரற்ற காசியிலே செப்பறிய கெங்கையிலே
ஒண்ணு முழிகி உமையாளெழுந்திருந்தாள்.
காசி விஸ்வநாதரே கண்டுமையும் போற்றி செய்தாள்
உசசி விஸ்வநாதரே பார்த்துமையும் போற்றி செய்தாள்
மண்ணுளும் வேந்தன் மகாராஜன் தான் பார்த்து
மண்ணுளும் வேந்தன் மந்திரியை தானழைத்து
அன்னத்தால் வந்து அரமளிக்கும் நாயகத்தே
அவள் அண்டறியாற் சென்னள் கடஞகேளுமெண்ணுர்
வட்டியுமுள்ள முதலுமறவாமல்
னெட்டாநாள் கொண்டுவந்து யீயுரேன்தாயே என்று
மண்ணுலும் வேந்தன் மந்திரியும் தான் கேட்டு
மண்ணுலும் வேந்தன் மடப்பளியும் விட்டறங்கி
அம்மா அன்னத்தால் வந்து அரமளிக்கும் நாயகமே
உன் அன்டறியா சென்னல் கடஞகத்தாருமம்மா
வட்டியுமுள்ள முதலு மறவாமல்
னெட்டா நாள் கொண்டு வந்து யீயுரேன் தாயே யெண்ணுர்
ஓங்கு புகழ்தென்னருன வுண்ணுமலேதாயும்
சிவகாமசுந்தரியும் திருவாய் மலர்ந்தருளி
எங்கள் சிவனுர் இடும்படி நெல் யீராழி
பிந்து முதலாய் இடும்படி நெல் யீராழி
அது அளவுக்கடங்காது யார் கண்ணுக்கும் தோணு

களவேறி காணுவது காரணமாம் சென்னலது
பிள்ளை யொருவன் பெரிய வயிரணுண்டு
அள்ளி வுண்ண மைந்தனுண்டு ஆறுமுகம் பன்னிருகை
தண்ட சிலேனார் தறியார் அரை நாழி
வீரச்சிலேனார் வெட்டி எரிந்திடுவார்
மன்னன் மகதருளும் மற்றுமுள்ள சேனைகளும்
அன்னப்பால் வந்து அருந்து மெண்ணாள் சாலையிலே
மண்ணாளுங்வேந்தன் மந்திரியுந்தான் கேட்டு
மண்ணாளுங் வேந்தன் மடப்பளியை போய் புகுந்து
மண்ணாளுங் வேந்தன் மன்னன் முகம் நோக்கி
மன்னன் மகதருளும் மற்றுமுள்ள சேனைகளும்
அன்னப்பால் வந்து அருந்து மெண்ணாள் சாலையிலே
மண்ணாளுங்வேந்தன் மகாராஜன் தான் கேட்டு
அவள் சென்னல் களஞ்சியத்தை சேரயிடும் கொள்ளையெண்ணார்
மண்ணாளுங் வேந்தன் வடிவழக்கை தான் கேட்டு
வேலன் குமாரி வெளிமுதலே வேர் பிடுங்கி
சூலம் பராமுசமும் தொழுமாமும் கை யேந்தி
ஏழு பிடாரிகளும் ஏழு நிலை கோபுரமும்
ஏழு திருக்குளமும் ஏழு நிலை மண்டபமும்
சென்னல் பறக்க திருக்குளங்கள் முன் பறக்க
வாயாலே சாபம் கொடுத்தாளே மாதேவி
கையாலே தட்டி நடந்தாளே கானகத்தில்
அவன் காலுரெண்டும் தேய்ந்தும் கானகத்தினுட் புகுந்து
மாதாவே தாயே மலை மகளே உனையறியேன்

தீயான மேனி சிவன் தேவி யென்றறியேன்
கன்றும் தனக்கிதங்கும் காராவும் நல் பசுவும்
என்னை மெத்த காத்தருளும் என்னைப்பெற்ற தாயாரே
மக்காளும் பூங்கொழலாள் மன்னன் முக நோக்கி
பொய்க்காலுங்காட்டி பொருந்துமெண்ணல் பூமியிலே
நீ யாடும் வேட்டைகளும் நீ ஏறும் சிம்மாதனமும்
உன் மைந்தனுக்கே யீந்து மரக்காலுங்கை பிடித்து
அற்பிசி பூசத்தில் அங்கவரும் மோட்ச மெண்ணள்
காஞ்சிமா நகரம் கதிரொளிவாய் தோணுது
புன்னைமர சோலைகளும் கூசாமல் ஓடைகளும்
கன்னலும் தென்னமரமும் கமுகுகளும்
சின்னமுத்து மாணிக்கம் குந்தளஞ்சேர் பச்சைகளும்
ஆரெங்கும் வோதும் அரிநெல்லி வெண்சாரெ
பாரெங்கும் வோதும் பரிநெல்லி வெண்சாரெ
கூட்டிய தேனும் குரிச்சார்ந்து நன்னிழலும்
பட்டும் பணுதியும் பாலித்துக்கொண்டதுபோல்
பள்ளத்தின் மோட்டினில் வந்து பணிந்தது போல்
காட்டினர் அம்மனுக்கு காஞ்சி நகர் புதுமைகளை
அங்குசில நாள் அலங்கரித்தாள் காவனத்தை
தங்க சிறு புள்ளுணி மேலே சிரகணிந்து
அங்கங்கே விழுந்த கனி ஆராய்ந்து தான் பொறுக்கி
கொம்பாங் கொடிமலராங் கொம்பின் சிறுதேனும்
ஒரு பூதம் வாழும் குளமுமந்த ஸ்தானமாம்
உச்சி வுலாவும் ஒளி வுள்ள காஞ்சியிலே
அல்ல வொண்ணு நாயகியும் அக்குளத்தில் அமர்ந்தா ளொழுந்
திருப்பாள்

அரவத்தழுவும் தவபலத்தின் பேரொளிவும்
ஒழியாததவங்களும் யோகமலை யோகிகளும்
யாவர்க்கும் மேலாய் இருக்கும் சிறு மாவுகளும்
பச்சை கிளிகளும் பஞ்சவர்ண நல் கிளிகள்
காரமொழி ராவளவும் காரணத்தால் ஆழம்பூ மாறும்
அருள் விளங்கும் மன்னலத்தி

அப்பா ளறுவார் அணுவழுந்தா ராயிரம்பேர்
சொல்லொளிவாய் சூழ்ந்த சுழி தயத்தாலாயிரம் பேர்
வெள்ள வெளியாய் விளங்கிய சிர்தவத்தால்
உள் பரப்புங்கொண்டு உலகம் நிலைநிறுத்தி
உழலே உழலேயம்மன் உத்தநிலங் கண்டுமையும்
தார்சிலையும் வக்கலையுந் தவரிஷிகள் யாவணையாம்
ஈச்சம்பழணியில் ஏகாம்பர நாதரே
அருகுபோல் அன்னமும் அரனார் அலங்காரியே
அரகரா வென்று அடிபோற்றி மாணுகம்
சங்கரா வென்று சாச்சுதந்த மாணுகம்
மாவடியில் சோதி வடிவாய் மணல் குவித்து
ஆவடையார் லிங்கமவள் அங்கழகா செய்யலூர்ஞர்
கோல கிரிமாவுமங்கே கொண்டலுடன் பூ பூத்து
கொண்டலுடன் பூ பூத்து கொம்பலுடன் காய் காய்த்து
கொம்பாலே ஆயிரம் குலிங்கி சொரிந்துதாம்
ஓங்கும் புகழ் தென்னருன வுண்ணு மலைத்தாயும்
சிவகாம சுந்தரியும் திருவாய் மலர்ந்தருளி

அடைக்களமாக வந்தேன் ஆகாசமாவே நீ
காட்டிக்கொடுக்காதே கையிலாசமாவே நீ
கோகிகரி மாவுமங்கே கொம்படைக்கிக் கொண்டுதே

பன்னிரு காதம் படர்ந்தெழுந்த அக்கினியில்
ஒற்றிவொரு அங்க தட்டி ஒற்றிவொரு கால்மடித்து
மற்று மொருக்கால் மடித்தே புறங்கலூர்றுள
உச்சி பெருவிரலால் ஊணி பரநோக்கி
அம்மன் முக்கால் தவமிருந்தாள் பூலோகம் யீடேற
தில்லை சிதம்பரரே சிந்தை தொழ வல்லவர்க்கு
இனி யில்லை பிறப்பன்று இன்னும் சின்னம் ஊதினாள்
ஏகாம்பர நாதரே கண்டு தொழ வல்லவர்க்கு
இனியில்லை பிறப்பன்று இன்னும் சின்னம் ஊதினாள்
காளத்தி நாதரே சிந்தை தொழ வல்லவர்க்கு
இனியில்லை பிறப்பன்று இன்னும் சின்னம் ஊதினாள்
மயில்கொண்ணை செஞ்சடையார்வந்திமெள்ளபார்க்கவாரார்
அவர் ஊணிய சூலமும் உருமபியகபாலமும்
தொந்தமென்ன துத்தியென்ன தூக்கிநின்ற பொற்பாதம்
அவர் அசைய கடந்தாரே ஆர்பவழ தில்லைவிட்டு
காணீரோ தேவரே என் காருணியாள் இங்குவர
என்னாகம் புரிஞ்ச யீஸ்வரியாள் இங்குவர
என் பாகம் புரிஞ்ச பார்வதியாள் இங்குவர
ரெட்டை இடைகளும் ரெண்டள நீர் கொங்கைகளும்
காணீரோ தேவேரே என் காருணியாள் இங்குவர
செவந்த மலர் சேணியர்கள் சேவித்து நின்றார்கள்
இவர் ஆண்டியில்லா காணுமிவர் அம்பல வாணரிவர்
ஆலத்திலுண்ணும் காளத்தி நாதரிவர்
வேடங்கை யெச்சலை யுண்ட விரிச்சடையார்
மாலையரை காணாத மயங்குபவரே யாமாகில்
ஆத்திளுமையாள் அருந்தவங்கள் செய்குறாள்

உண்ணாமலையம்மன்.

நீர் அங்க ளெழுத்தருளும் ஆனந்த தாண்டவமே
அசுரர்களை யீடேறுத்த அண்டபிர வெண்ணீரே
நிரையவே பூசையே நிர்ச்சலமாய் தானடைந்தார்
அடி அண்ணே நான் காணேனே அகிலாண்ட நாயகியே
உன்னை வைத்துப்பதியேனே வாழ்மாலை சூட்டேனே
எடுத்துப்பதியேனே ஏகத்தில் வெண்ணீரே
கால் காட்டி கைகாட்டி கண்கள் முகங்காட்டி
வார் காட்டி உந்தன் வடிவழகை தேடுரண்டி
ஓங்கு புகழ்தென்னருண வுண்ணாமலைத்தாயும்
சிவகாம சுந்தரியும் திருவாயமலர்ந்தருளி
நம் பக்தியறிவோமென்று பாலிப்பதித்தனையும்
சிவந்த மலர் சிந்தையில் வுள்ளே சிவன் கருத்தே
அழுந்த தழுவியே நிண்ணாள் அருங்காவில்
கண்டுலகம் உண்டவளே கரையேற்ற வேண்டுமென்று
வார்சடையாள் கெங்கையரே வாவென்று தானழைத்தார்
தார் சடையார் கூற தரியா ளெழுந்து கெங்கை
மாலைச்சிலம்பசைய வந்து மங்கே நின்று தங்கே
செய்ய யொருபுறமும் திருபுரமு மெய்தவரே
பையரவம் பூண்டவரே பங்கயத்தோன் பூமுடிய
கையாலே கிள்ளி கபாலம் தரித்தவரே
நத்தாபுரவி நரிபுரவி யானவரே
வித்தக மாகாளி விரிட்டவித்தகரே
பொங்குமோரி பாம்பே பூண்டபுலி நூலடையும்
மறுவற்ற சொக்கர் வாழும் மதுரையிலே
அறுபது நால் திருவிளையாடல் ஆடியல்லோ

மூலமே யென்று முடிவணங்கி கெங்கையறும்
அடி கெங்காபவானி தவசு கேட்டதில்லை இதுவரையில்
பொங்காரமாக போதக்கொண்டு சங்கருக்கு
அடி வாழுனக்கு மாத்தவென்று வந்து தவம் பண்ணுகிறாள்
அவள் பண்ணும் தவங்கள் பலிக்குமே யாமாகில்
எண்ணுமிந்த தாராவே வுள்ள சிவன் கருத்தே
ஐந்து பொன் சங்கரரே அளவாக யீயுரேன்
காத்தருளும் சாமியென்று கை கூப்பி நீங்கினாள்
எல்லையளந்த பெருமாளவர் பார்த்து
ஏழுலகமாண்ட பெருமாளெடுத்துரைப்பார்
கத்தரி பூலதம்பை கலந்த அருகு நொச்சி
கத்தாழை வேலகத்தி கார்கஸ்தி நாவுருவி
மற்றோ ரருகழுக வன்னிகலங்களிக்க
ஒக்கமென்று சூடுவதும் உண்மையல்லே சங்கரரே
வெளிக்கு விளக்கேற்ற வேண்டுமோ வித்தகரே
பொங்குமரிபாம்பே பூங்கரக நாயகரே
ஒரு போக்கு வினைமாத்திரம் பொருந்துமென் சங்கரரே
எண்ணுகிலும் எங்களுக்கு ஒரு எளி தங்க வந்ததுண்டோ
குண்ணெடுத்த தோளால் குலுங்க நகைசெய்தாரே
ஆதி சிவனார் அரனார் அவர் கேட்டு
ஐயா உம்மோடுடன் பிறந்தாளுண்டோ தான்பேருலகில்
என் உண்மையறியாத ஓடிவந்து கண்மறைத்தாள்
அவள் உண்மை வினை தீரவென்று கம்மையிலே மாதவங்கள்
செய்யுறாள் காணுமென்னார்
எல்லையளந்த பெருமாளவர் கேட்டு

பூங்கரகம் பூண்டசிவன் பொய்யுரைக்க மாட்டாரே
வளால முண்டவர்க்கு அரை எருது வெள்ளெருது
வெள்ளைக்கு ஏற்ற விருப்பமடிச் சுருத்தி
ரெண்டு கொம்பும் மின்னசைய இலங்கு கொம்பு பின்ன
சைய
கேளிச்சலங்கையுடன் வயிரமணி ஜோதிமின்ன
சலங்கையுடன் வயிரமணி சிவந்த பொன் சங்கலிகள்
காலு நடைக்கும் நயன் மணி சோதிமின்ன
வொண்ணுவே மாணிக்கம் கல்லும் வொளிதிகழ
திருத்தியாக திருவிளக்கை யேற்றி வைத்தார்
அற்புத கூத்தருக்கு அழகெருது ஜோடித்தார்
செருங்க நெருங்கிவந்தார் சிவன் பண்ணும் ஆவடைக்கு
அண்டம் நெருங்கி வந்தார் அம்மன் தவம்பார்க்க
எல்லையளந்த பெருமாளவர் பார்த்து
ஏழுலக மீண்ட பெருமா ளெடுத்துரைப்பார்
எள்ளுக்கு ளெண்ணைபோல் எங்கு நிற்பீர் சாட்சியாய்
சொர்ப்பனம் சூழுவதும் சுயிசாதனங்க ளல்லவோ
சர்ப்பனையும் வல்வினையும் சேராது நெஞ்சிலே
ஒப்பற்ற வுண்ணுமலையே வுமையவளே
கரிபாஷ சன்னியரே கார்க்கு நல்ல காமாட்சி
திரு பாடகக்காலாலே செய்யும் திருநகை தான்
உம்மையும் நம்மையும் யுண்டாக்கு மீஸ்வரிதான்
ஓட்டிலுண்ட சாம்பல் அணிச்சிலம்பால்பூண்டவர்தான்
சூலம் கையிலேந்தி சுடல நடலமாடியே
மாடேரி வந்த மதியல்ல வுந்தனுக்கு
தந்தை தமக்கை யில்லை மற்ரோரறிவுமில்லை

பின்னே பிறப்புமில்லை பெண் பிறப்புதானுமில்லை
பிரமன் தலைவோட்டாலே பிச்சை யிரந்துண்டார் தான்
அடுத்திவரும் வெள்ளிமலை அண்ணரக்கன் பேர்த்தெடுப்பான
நீர்கொடுத்த வரம் மாத்திரம் ஒரு குழந்தையோ டொத்திடுமே
எண்ணுகிலும் எங்களுக்கு ஒரு ஏளிதங்கள் வந்ததுண்டோ
குண்ணெடுத்த தோளால் குலுங்க நகை செய்தாரே
ஆதி சிவனார் அரனார் அவர் கேட்டு
நாரணர்க்கும் தங்கையர்க்கும் நல்பதமே வொட்டாமல்
தேடி திரிந்து சிவனெங்கே என்றலைந்து
ஓடி பறந்த பெண்ணே ஒன்பதும் தப்பிதந்தான்
அத்த மகனென்பீர் அவரிவரை சுத்தமெம்பீர்
இலகு சங்கு வாளெடுத்து அவரிவரை கொல்லுமெம்பீர்
போந்தும் படையெடுப்பீர் போர்களத்தில் அற்புதந்தான்
ஓட்டிவிடக் கஞ்சனே உலகிருக்கவொட்டாமல்
மாட்டிடையர் வீட்டில் வளர்ந்த வெகுசூரர் கண்டாய்
கோலிட்டு மேய்த்து குடுவை தயிர் குடித்து
அடிபட்டு நின்னுர்க்கு அசதிமிகவுண்டோதான்
மாலு தொந்தி தாமரையால் வந்த மலரோனே
நாலு முடி சோதிமின்ன நல்மலைகளொப்பரிக்க
தோள் மாலையோடே தொவண்டசைந்த குண்டலமும்
இட்ட பவுத்திரமும் ஏத்த புலி நூலடையும்
முகமாறு சாஸ்திரத்தால் மூண்டு கொண்ட தத்துவத்தால்
தவமாறு சாஸ்திரத்தால் தான் மிகுந்த தத்துவத்தால்
உலவும் அலகும்போல் ஒத்திருப்பீர் உத்தமரே
பூவும் பரிமளம் போல் பொருந்திருப்பீர் புண்ணியரே
நகமும் சதையும்போல் ஒத்திருப்பீர் வுத்தமரே

உ

கண்டத்தில் கொண்டு கதிரோனும் காமேனும்
பிண்டத்தில் கொண்ட பெரிதான பேரீசன்
சோதிமுக நலபளிங்கம் சோதிமுகம் மன்னுக்கரசி மாசிலா
முத்து முகம்
பின்னை மரச்சோலைகளும் பேரில்லா பெண்மானே
நாதர் மனங்காலால் நல்மலைகள் உப்பரிக்க
உப்பரித்தகாமனே காஞ்சகண்ணும் வெண்ணகையும்
அந்த வகை வரசே ஆரணங்கும் காணுமல்
தேடி திரிந்து சிவனெங்கே என்றலைந்து
ஓடிப்பறந்து உழன்ற நாள் தங்கலுமே
மாதா அருந்தவத்தால் வந்து வெளிபட்டோமே
இச்சிக்கும் பேரின்பம் பெற்ருேம் இருவருமாய்
முத்துக்கடலில் முழுகினர் தேவரெல்லாம்
பட்டடைய விட்டிறங்கி பலர்சடையாள் கெங்கையரும்
சித்திரம்போல் வந்து சிவனே யடிவணங்கி
பட்டு நீர் விட்டு பலதீர்த்தம் தாணுடி
அம்மா நீர் கதவை தாள் திறந்து சிக்கனவே பூண்டாள் திரு
வாபரணமெல்லாம்
சிவன் கண்டால் மையலாவார் காவலப்பூ நாயகியே
ஒன்பது கெங்கையரே உத்தமியே வாருமென்ஞர்
பதினெட்டு கெங்கையரே பவானிகளே வாருமென்ஞர்
மண்ணதிரகுத்தி மாமரத்தைப் பேர்த்தெடுத்து
ஏரேறு சிங்கம் எதிர்த்து வரும் காட்டானை
அம்புலி நீரோட்டம் ஆற்றில் மிதந்துவர
பாம்பு தலைகள் பலவாய் மிதந்துவர

கொத்தவன் குடிபிடுங்கி பூமரங்கள் வேர்பிடுங்கி
பூவண்டு மேலே பொரிவண் டிசல்பாட
வண்டுகள் மேலே மயில் வந்து கூத்தாட
சார நிழலில்லாத நள்ளிவரும் தேரைகளும்
கற்பழியா மங்கையர்க்கு குன்ன துபோல் செயல்கண்ட யோடி
மிதந்து திள்ளி வுலாவும் பெருங்கண்டைகளும்
அண்டம் பிளப்புமாய் ஆறு வருகுதம்மா
தொண்டர்க்கு நெஞ்சம் தோணவில்லை மாதாவே
பண்டு பவளத்தால் பத்தர்க்கும் நல்தோணை தான்
பங்க யத்தாளெங்கலையும் பாலிக்க வேண்டுமென்று
சிவந்த மலர் சேணியர்கள் சேவித்து நின்றார்கள்
பன்னிரு காதம் படர்ந்தெழுந்த அக்கினியில்
கொம்பே ரிடையாளுக்கு குளிர் காற்றாய் தோணுது
ஓங்கு புகழ்தென்னருண வுண்ணாமுலைத்தாயும்
சிவகாமசுந்தரியும் திருவாய் மலர்ந்தருளி
என் தவத்தை யழிக்கவென்று வாராளே கெங்கையரும்
முருகனே யீன்றெடுத்த முகவனே ஆறுமுகம்
அழுந்தத் தழுவினாள் சிவன் ஆதி திருமேனி யெங்கும்
பருக்கை மணல் பருத்தி பாரெங்கும் நீடுறவி
வழி கொண் டோடுதாம் மானாகம் கரடி புலி
சேர்ந்து செடி மூடி சேர்ந்தாள் சமுத்திரத்தில்
கெங்கை கரையருகே கிளிமொழியும் வந்து நின்று
ஈஸ்வரனார் தன் கழுத்தில் இருக்குமந்த மாலைகளும்
ஈஸ்வரியாள் தன் கழுத்தில் இருக்கவே கண்டாளே

என்னை வகைக்க இற[illegible]ங்கவகை செய்தீரே
பட்டையும் மே[illegible] பலர் சடையும் போய்ச்சேர்ந்தாள்
சங்கரனார் மாதாச்க தங் தாதிமார் ஓடிவந்து
பன்னீர் பரிமளிக்க வீச மயக்கம் தெளிவுற்றெழுந்திருந்தாள்
அண்டா வயரி அதி சூன்னியக்காரி
பண்டொருக்காலம் பழம் விக்கும் பாட்டியவள்
ஆபுரி நீலி எண்ணை சிவனுக்கு மாறுக்க
திரா மயளாவர் சிவ னானக்கு
கொம்பால் இலையடக்கா கொள்ளுமென்று கை கொடுத்தார்
ஆதி சிவனார் அரனார் அவர் பார்த்து
அவள் தவசு நிண்ணைப்போல் சடைமுடியில் பேரொளியும்
குளிர்ந்த திருமுகத்தில் குரிவேர்ப்பூ நீர் தளும்ப
காளியுடன் வாதாடும் காலால் நடந்து வந்து
பவானி யருகாக யீஸ்வரரும் வந்து நின்று
ஏ தேடி கெங்கையரே ஏங்குதலை வுந்தனுக்கு
பட்டும் பணாதியும் பலர் பணியும் தானெடுத்து
அந்தந்த கெங்கையர்க்கு யீஸ்வரரும் தான்கொடுத்தார்
தங்கச்சடை முடிய தரதனிலே தான் விரித்தார்
எந்தன் ஜடைமுடிமேல் ஏறுமெண்ணார் கெங்கையரோ
கொம்பாங்கொடிமலராங் கொம்பிற் சிறுதேனும்
ஒருவண்டாய் வடிவுகொண்டாள் மாதுநல்ல கெங்கையரும்
ஒருவண்டாக ஏறினாள் மாதுநல்லாள் கெங்கையரும்
சேர்த்து முடித்தாரே செம்பவழக்கையாலே
அவதவசு நிண்ணைப்போல் சடை மொழியில் பேரொளியும்
குளிர்ந்த திருமுகத்தில் குறிவேர்பூ நீர்தளும்ப

காளியுடன் வாதாடும் காலால் நடந்து வந்து
ஈஸ்வரியாள் பக்கயிலே யீஸ்வரனுர் வந்து நின்று
அக்கினியை விட்டிறங்கும் அகிலாண்ட நாயகமே
ஓங்கு புகழ்தென்னருண உண்ணுமுலேதாயும்
அவள் அக்கினியை விட்டிறங்கி அகிலாண்ட நாயகமும்
அக்கினி ஸ்தம்பத்தை அடிவணங்கி பூஜை பண்ணி
ஈஸ்வரனுர் பக்கையிலே ஈஸ்வரியும் வந்து நின்று
காஞ்சிவரத்தில் கனக தவம் செய்தாலே
எனக்கு அங்க இடபாகம் அளிக்கிறேன் நிண்ணீரே
என்னே வகைக்க இறங்க வகை செய்தீரே
ஆதி சிவனுர் அரனுர் அவர் கேட்டு
செம்பவழ வாயை திறந்து சிவனுரும்
செம்பவழ வாயால் திருமுருகர் கொண்டருளும்
அடிக்கொரு திருக்குளங்க அக்ஷணமே யுண்டுபண்ணி
அந்த திருக்குளத்தில் அடிவணங்கி ஸ்தானம் பண்ணி
அடிக்கொரு சிவலிங்கம் அக்ஷணமே யுண்டுபண்ணி
அந்த சிவலிங்கம் அடிவணங்கி பூசை பண்ணி
அண்ணுமலேயில் அருணுபுரி தனிலே
கேடொன்று மில்லாத கௌதமனுர் தன்வனத்தில்
நீ டெரிஞ்சிக் கானகத்தில் நின்றுதவம் செய்தாலே
உனக்கு அங்க இடப்பாகம் அளிக்கிறேன் நின்றுரைத்தார்
ஓங்கு புகழ்தென்னருண உண்ணுமுலேத்தாயும்
சிவமொழியை கேட்டவுடன் சிந்தைமிகக் கலங்கி
தவமழிய வாரதஞ்சம் இல்லேயெண்ணுள் சங்கரியும்
அடிக்கொரு திருக்குளங்கள் அட்சணமே யுண்டு பண்ணி

அந்த திருக்குளத்தில் அடிவணங்கி ஸ்தானம் பண்ணி
அடிக்கொரு சிவலிங்கம் அக்ஷணமே யுண்டு பண்ணி
அந்த சிவலிங்கம் அடிவணங்கி பூஜை பண்ணாள்
அண்ணா மலையில் அருணாபுரி தனிலே
கேடொன்றுமில்லாத கௌதமனார் தன் வனத்தில்
கௌதமனார் தன் வனத்தில் வந்தாள் கிளி மொழியும்
அப்போ கௌதமரும் அடிவணங்கி ஏதுசொல்வார்
அம்மா எங்க வந்தீர் எங்க வந்தீர் எந்தாயே சொல்லுமெண்ணார்
தவத்துக் கிசைந்தவிடம் எந்தவிடம் காட்டுமெண்ணாள்
அப்போ கௌதமரும் அடிவணங்கி ஏது சொல்வார்
நாதாந்த மானமலை நம்பெருமாள் கேத்தமலை
நாரதரும் ஐயரும் அடி தேடி காணாமலை
தவத்துக்கிசந்த விடம் இந்த விடம் காணுமெண்ணார்
ஓங்கு புகழ் தென்னருண வுண்ணாமுலைத்தாயும்
பன்னிரு காதம் படர்ந்தெழுந்த அக்கினியில்
ஒத்திவொரு அங்கதட்டி ஒத்திவொருகால் மடித்து
மற்று மொருகால் மடித்தே புறங்களூற்றாள்
உச்சி பெருவிரலால் ஊணி பறனோக்கி
அம்மன் முக்கால் தவமிருந்தாள் பூலோகம் யீடேற
அந்த வனத்தில் இருக்குமந்த அன்னபக்ஷி
அன்ன பக்ஷியெல்லாம் அவனெடுத்து பட்சிப்பான்
மாலைமுடியான் மகுடாசூரன் அங்கிருந்தான்
அந்த வனத்தில் இருக்குமந்த அன்னபக்ஷி

அன்ன பக்ஷி யெல்லாம் அபயமென்று ஓடிவந்து
ஆதிபராஞ்சோதி அம்மன் கையில்வந்து அமைந்தது
மாலேமுடியான் மகுடா சூரன் ஓடிவந்து
என் அன்னத்தை தாருமம்மா அகிலாண்ட யீஸ்வரியே
ஓங்கு புகழ் தென்னருண உண்ணுமுலேத்தாயும்
சிவகாம சுந்தரியும் திருவாய மலர்ந்தருளி
உனக்கு அன்னங்கொடுப்பதில்லே அபயம் கொடுப்பேனென்
றுள்
மாலேமுடியான் மகுடா சூரன் தான் கேட்டு
அவன் ஆக்கிரிசசு பல்கடித்து வந்தான் அருகாக
ஓங்குபுகழ் தென்னருண உண்ணுமுலேத்தாயும்
துர்க்கையம்மா காளியனை க்ஷணப்பொழுதில் தானினேந்
தாள்
துர்க்கையம்மா காளியரும் க்ஷணப்பொழுதில் ஓடிவந்தாள்
ஓங்குபுகழ் தென்னருண உண்ணுமுலேத்தாயும்
சிவகாம சுந்தரியும் திருவாய் மலர்ந்தருளி
என் அன்னத்தை கொல்ல வந்த அண்டாத ராக்ஷதனே
எடுத்துங் கிழியுமென்ருள் எமகண்டி ராக்ஷதனே
துர்க்கையம்மா காளியரும் க்ஷணப்பொழுதில் ஓடிவந்து
அன்னத்தைகொல்ல வந்த அண்டாத ராக்ஷதனே
எடுத்துங் கிழித்தாளே எமகண்டி ராக்ஷதனே
எருமை தலேப்போல் வுருவங்கொண்டான் ராக்ஷதனும்
மருச்சுங்கிழிச்சாளே மாபாவி ராக்ஷதனே
ஆட்டுத்தலேபோல் உருவங்கொண்டான் ராக்ஷதனும்

மருச்சுங்கிழிச்சாளே மாபாவி ராக்ஷதனை
அவன் நெஞ்சி குழியில் நெரியவே காலைவைத்து
உள்ளங்காளாலே அரக்கிவிட்டாள் ராக்ஷதனை
ஏதோ சிவலிங்கம் இருந்தது அவன் கழுத்தில்
அந்த சிவலிங்கம் அடி வணங்கி கொண்டுவந்தாள்
ஆதிபராஞ்சோதி அம்மன் அருகாமை வந்து நின்ணாள்
உன் அன்னத்தை கொல்லவந்த அண்டாத ராக்ஷதனை
எடுத்துங்கிழித்தனம்மா எமகண்டி ராக்ஷதனை
எருமை தலைபோல உருவங்கொண்டான் ராக்ஷதனும்
மருச்சுங்கிழித்தனம்மா பாவிராக்ஷதனை
ஆட்டுத்தலைபோல் உருவங்கொண்டான் ராக்ஷதனும்
மறுச்சுங்கிழித்தனம்மா மாபாவி ராக்ஷதனை
அவன் நெஞ்சி குழியில் நெருங்கவே கால்வைத்து
உள்ளங் காளாலே அரைக்கி விட்டேன் ராக்ஷதனை
ஏதோ சிவலிங்கம் இருந்தது அவன் கழுத்தில்
அந்த சிவலிங்கம் அடி வணங்கி கொண்டு வந்தேன்
ஆதிபராஞ்சோதி அம்மன் கையில் அமைந்தது
ஓங்கு புகழ் தென்னருண வுண்ணுமுலைத்தாயும்
சிவகாமசுந்தரியும் திருவாய் மலர்ந்தருளி
அப்போ கௌதமரை ஆரணங்கும் தானினைந்தாள்
அப்போ கௌதமரும் அடி வணங்கி ஓடிவந்தார்
இந்த சிவலிங்கம் வந்த வகை சொல்லு மெண்ணாள்
அப்போ கௌதமரும் அடிவணங்கி ஏது சொல்வார்
பூர்வ ஜன்மாந்திரத்தில் புகழ் பெரிய கந்தருவன்
அவன் வன் பாவம செய்து வனத்தில்குடியிருந்தான்

அந்த வனத்தில் இருக்கு மகாரிஷிகள்
அந்த ரிஷிகாளே அவனெடுத்து பட்சிப்பான்
அவருடைய தன் கழுத்தில் இருக்கு மகா லிங்கமது
இது என்னைவிட்டு நீங்குவது எனைவகை சொல்லு மெண்ணாள்
அப்போ கௌதமரும் அடிவணங்கி யேதுசொல்வார்
அம்மா இரண்டாயிரம் திருக்குளங்கள் க்ஷணப்பொழுதில் உண்டுபண்ணி
அந்த திருக்குளத்தில் அடி வணங்கி ஸ்தானம்பண்ணி
இரண்டாயிரம் சிவலிங்கம் க்ஷணபொழுதில் உண்டுபண்ணி
அந்த சிவலிங்கம் அடி வணங்கி பூசை பண்ணி
துர்க்கையம்மா பொய்கையும் க்ஷணப்பொழுதில் உண்டு பண்ணி
துர்க்கையம்மா பொய்கையிலே அடி வணங்கி ஸ்தானம் பண்ணால்
துர்க்கையம்மா கோவிலும் க்ஷணப்பொழுதில் உண்டுபண்ணி
துர்க்கையம்மா கோவிலிலே அடிவணங்கி பூஜைபண்ணால்
அது அங்கயே நீங்கிவிடும் ஆதிமகாலிங்கமது
ஓங்கு புகழ்தென்னருண உண்ணாமுலைத்தாயும்
ஆதிசிவனார் அரனை தானினைந்தாள்
ஆதிசிவனார் அரனார் அவர்கேட்டு
அவர் ஆகாச மார்க்கமாய் அந்தரமாய் வந்து நிண்ணார்
ஓங்கு புகழ் தென்னருண உண்ணாமுலைத்தாயும்
சிவகாமசுந்தரியும் திருவாய்மலர்ந்தருளி
சிவலிங்கம் வந்த வகை என்ன வகை சொல்லுமெண்ணாள்
ஆதி சிவனார் அரனார் அவர் கேட்டு

அடி பூர்வ ஜன்மாந்திரத்தில் புகழ்பெரிய கந்தருவன்
அவன்வன் பாவம் செய்து வனத்தில் குடியிருந்தான்
அந்த வனத்தில் இருக்குமகா ரிஷிகள்
அந்த ரிஷிகளே அவனெடுத்து பட்சிப்பான்
அவருடைய தன் கழுத்தில் இருக்குமகாலிங்கமது
என்னை விட்டு நீங்குவது என்னவகை சொல்லுமெண்ணாள்
ஆதி சிவனார் அரனார் அவர் கேட்டு
இரண்டாயிர திருக்குளங்கள் க்ஷணப்பொழுதில் உண்டு பண்ணி
அந்த திருக்குளத்தில் அடிவணங்கி ஸ்தானம்பண்ணி
இரண்டாயிரம் சிவலிங்கம் க்ஷணப்பொழுதில் உண்டு பண்ணி
அந்த சிவலிங்கம் அடிவணங்கி பூஜை பண்ணி
துர்க்கையம்மா பொய்கையும் க்ஷணப்பொழுதில் உண்டு பண்ணி
துர்க்கையம்மா பொய்கையிலே அடிவணங்கி ஸ்தானம் பண்ணி
துர்க்கையம்மா கோயிலும் க்ஷணப்பொழுதில் உண்டுபண்ணி
துர்க்கை யம்மா கோயிலே அடி வணங்கி பூஜைபண்ணல்
அது அங்கயே நீங்கிவிடும் ஆதிமகாலிங்கமது
செப்பு சிலைகளும் சீக்கிரமாய் உண்டுபண்ணி
முப்பது நாளையில் முடியுமெண்ணார் விரதத்தை
யாவரும் காண ரிஷபத்து மேலேரி
மானே உனை நான் மணம் பொருந்த வாரமெண்ணார்
அவர் ஆகாசமார்க்கமாய் அந்தரமாய் போய் மறைந்தார்

ஓங்கு புகழ் தென்னருணை உண்ணாமுலைத்தாயும்

அங்கினியை விட்டிறங்கி அகிலாண்ட நா[illegible]களும்

அக்கினி ஸ்தம்பத்தை அடிவணங்கி பூஜைபண்ணி

இரண்டாயிரம் திருக்குளங்கள் க்ஷணப்பொழுதில் உண்டு பண்ணி

அந்த திருக்குளத்தில் அடிவணங்கி ஸ்தானம்பண்ணி

இரண்டாயிரம் சிவலிங்கம் க்ஷணப்பொழுதில் உண்டு பண்ணி

அந்த சிவலிங்கம் அடிவணங்கி பூஜைபண்ணி

துர்க்கையம்மா பொய்கையும் க்ஷணப்பொழுதில் உண்டு பண்ணி

துர்க்கையம்மா பொய்கையிலே அடிவணங்கி ஸ்தானம் பண்ணி

துர்க்கையம்மா கோயிலும் க்ஷணபொழுதில் உண்டுபண்ணி

துர்க்கையம்மா காளியாரை அடிவணங்கி பூஜைபண்ணாள்

அதை அங்கையே நீங்கிச்சி ஆதிமகாலிங்கமது

செப்பு செலைகளும் சீக்கிரமாய் உண்டுபண்ணாள்

முப்பது நாலையில் முடித்தாளே விரதத்தை

வேதியரை காணாதே மெத்த மனங் கலங்கி

ஆதி சிவனார் அரனாரை தானினைந்தாள்

அவர் காவியும் இரண் டுடுத்தி பூணூலும் மேல் போட்டு

கவடஞ்சி புஸ்தகத்தை கைதனிலே தான் பிடித்து

இருவத்தோர் வகை புஷ்பம் இன்பமுடன் கொண்டு வந்தார்

அ[illegible]படதிரிசம் ஆரணங்கே செய்யுமென்றார்

கர்பூரம் காட்டுமெண்ணார் கர்த்தாவும் அப்பொழுது
செப்பு சிலை பெ[illegible]த்து சீக்கிரமாய் போய்மறைந்தார்
ஓங்குபுகழ் தென்னருண உண்ணாமுலைத்தாயும்
ஆதிசிவனார் அரனாரை தானினைந்து
காஞ்சிவரத்தில் கனகதவஞ் செய்தாலே
எனக்குஅங்கே இடப்பாகம் அளிக்கிறேன் நிண்ணீரே
அண்ணாமலையில் அருணாபுரிதனிலே
நீடரிஞ்ச கானகத்தே நின்று தவம் செய்தாலே
அங்கே இடப்பாகம் அளிக்கிறேன் நிண்ணீரே
என்னை வகைக்கோ இறங்க வகை செய்தீரே
ஆதிசிவனார் ஆனார் அவர்கேட்டு
யாவருங்காண ரிஷபத்து மேலேறி
அவர் ஆகாய மார்க்கமாய் அந்தரமாய் வந்து நிண்ணார்
ஈஸ்வரியே தானெடுத்து இடதுபக்கம் தன்னில் வைத்தார்
இடது கையாலே தழுவி அந்த ஈஸ்வரியே
அந்தர துந்துமிகள் அதிர முழங்கி வர
ஆகாய பூமாரி அப்போமிக சொரிய
கின்னர கெந்தருவர் கேளிக்கை யாடிவர
கர்த்தாவும் அப்பொழுது கைலாசம்போய்ச்சேர்ந்தார்.

உண்ணாமுலை யம்மன் தவசு மாலை
முற்றிற்று.

59029
NII